FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2023 ஏப்ரல்

Vol. 03 - **தொகுதி 04**



சாந்த விஜேசூரிய மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் முறைப்பாடு



தர்சன ஹதுன்கொடவிற்கு எதிரான தடை உத்தரவு



இஷாராவின் முறைப்பாடு தொடர்பில் விசாரணை

ஊடக சுதந்திரம் குறித்து ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஏப்ரல் 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 04 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 06 சம்பவங்கள், தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பில் 04 சம்பவங்கள் என மொத்தம் 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## ஏப்ரல் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. அமைச்சர் ஒருவர் விடுத்த அச்சுறுத்தல் தொடர்பில் ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் பொலிஸில் முறைப்பாடு செய்தமை.
2. வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட மனு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை.
3. பொலிஸாரின் தாக்குதல் தொடர்பில் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டமை.
4. அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) அறிவித்துள்ளது.
5. உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமெரிக்க அதிபர் எதிர்க்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) அறிவிப்பு.
6. உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப்பெறுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு (ICJ).
7. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்ததுடன் அக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டமை.

8. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் அறிவித்தமை.

9. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான போராட்டத்தைத் தடை செய்யுமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.

10. சமூக ஊடக செயற்பாட்டாளர் தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராக நீதிமன்றத்தினால் தடையுத்தரவு விதிக்கப்பட்டமை.

11. ITN தொலைக்காட்சியின் பெண் அறிவிப்பாளர் ஒருவர், நிறுவனத்தின் தலைவர் ஒருவரின் பாலியல் துன்புறுத்தல் காரணமாகப் பணியிலிருந்து விலகியதாகத் தெரிவித்துள்ளமை.

12. வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டமூலம் தயாரிக்கப்படும் என நாடாளுமன்றத்தில் ஊடகத்துறை அமைச்சர் அறிவித்தமை.

13. தற்கொலைபற்றிய செய்தியொன்றை நெறிமுறையற்ற முறையில் அறிக்கையிட்டமை தொடர்பாகச் சுதந்திர ஊடக இயக்கம் முறையீடு ஒன்றை மேற்கொண்டமை.

14. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் நினைவேந்தல்.

15. காலிமுகத்திடலில் நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த நபர்களைப் போலீசார் முறையற்ற விதத்தில் இடையூறு விளைவித்தமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 ஏப்ரல் மாதம்**

| **உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள்** | **அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 06 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 04 |
| **மொத்தம்** | **15** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 04 சம்பவங்கள் ஏப்ரல் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2: 2023 ஏப்ரல் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 04**

| **குறிகாட்டி** | **அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| தாக்குதல் | 01 |
| உளவியல் ரீதியான பாதிப்புக்கள் | 03 |
| **மொத்தம்** | **04** |

1. **அமைச்சர் ஒருவர் விடுத்த அச்சுறுத்தல் தொடர்பில் ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் பொலிஸில் முறைப்பாடு செய்தமை.**

கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போது இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் தான் அச்சுறுத்தப்பட்டதாக குறித்த ஊடகவியலாளர் CIB/iii/249/192 என்ற இலக்கத்தின் கீழ் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆதாரம்: [twitter.com/JDSLanka](twitter.com/JDSLanka)

2. **பொலிஸாரின் தாக்குதல் தொடர்பில் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டமை.**

கடந்த மார்ச் 31ஆம் திகதி நுகேகொடையில் இடம்பெற்ற போராட்ட நினைவு கூறலின் போது சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவினால் குறித்த ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் ஏப்ரல் 6ஆம் திகதி இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளார். குறித்த போராட்டத்தின்போது சமூக ஆர்வலர் லஹிரு வீரசேகர மீது பொலிஸார் தாக்குதல் நடாத்துவதை புகைப்படம் எடுக்கும்போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தி அவர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: www.youtube.com, thetime.lk

3. **ITN தொலைக்காட்சியின் பெண் அறிவிப்பாளர் ஒருவர், நிறுவனத்தின் தலைவர் ஒருவரின் பாலியல் துன்புறுத்தல் காரணமாகப் பணியிலிருந்து விலகியதாகத் தெரிவித்துள்ளமை.**

பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளரான இஷாரா தேவேந்திரா தனது முகநூலில் பதிவிட்டு, வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரங்களுடன் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் புகார் அளித்தும் தீர்வு கிடைக்காததால் சுயமரியாதைக்காகப் பணியிலிருந்து இராஜினாமா செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியின் தலைவர் சுதர்சன் குணவர்தன தற்போது வெளிநாட்டில் இருப்பதாகவும், அவர் நாட்டிற்கு வந்தபின்னர் விசாரணை நடத்தப்படும் எனவும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

ஆதாரம்: www.ceylonmirror.net

4. **காலிமுகத்திடலில் நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த நபர்களைப் போலீசார் முறையற்ற விதத்தில் இடையூறு விளைவித்தமை.**

ஏப்ரல் 9 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களின் பகிரங்க அழைப்பின்படி, மத மற்றும் தேசிய நல்லிணக்கத்தைப் போற்றும் ஒரு குழுவைத் திருப்பியனுப்புவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தவர்களை வேறுபடுத்தி அடையாளம் காண்பதற்கு முஸ்லிம்களின் மத ரீதியான வார்த்தைகளைக் கூறுமாறு அங்கு வந்தவர்களை நிர்ப்பந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பொலிஸாரின் இந்தச் செயலுக்குப் பங்கேற்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஆதாரம்: www.facebook.com, facebook.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**ஏப்ரல் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 06 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. சட்ட நடவடிக்கைகள் தொடர்பான 3 சம்பவங்களும், சட்ட சீர்திருத்தத்தின் கீழ் இரண்டு சம்பவங்களும் இதில் அடங்குகின்றன. மேலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருதல் என்ற தலைப்பு இந்தக் விடயப்பரப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதால், சிவராம் நினைவேந்தல் தொடர்பான சம்பமும் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.**

**அட்டவணை 03 – 2023 ஏப்ரல்: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்– 06 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 03 |
| சட்ட சீர்திருத்தங்கள் | 02 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருதல் | 01 |
| **மொத்தம்** | **06** |

1. **வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட மனு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்துச் சட்டமா அதிபர் இந்த மேன்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். மனுவில் உள்ள சட்டப் பிழையைச் சரிசெய்ய ஏப்ரல் 3ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் ஜூன் 1ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: dasathalankanews.com

2. **பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் அறிவித்தமை.**

2023 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “பயங்கரவாதத்திற்கு எதிரான“ சட்டமூலம்

தொடர்பான கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக நீதி அமைச்சர் ஏப்ரல் 6 ஆம் திகதி அறிவித்தார்.

நீதிமன்ற விடுமுறை (court vacation) காரணமாகச் சட்டமூலம் தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்லும் நிலைமையைக் கருத்திற்கொண்டு சட்டமூலத்தை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரம்: theleader.lk/news

3. **ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான போராட்டத்தைத் தடை செய்யுமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.**

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்படவிருந்த போராட்டத்தைத் தடை செய்யுமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திக்க டி சில்வா நிராகரித்தார்.

அரசியலமைப்பின் 13 மற்றும் 14 ஆவது சரத்துக்களின்படி, பொலிஸாரின் அனுமானங்களின் அடிப்படையில் பொதுமக்கள் அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான உரிமையைத் தடைசெய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென நீதவான் இங்கு வலியுறுத்தினார்.

ஆதாரம்: thetime.lk

4. **சமூக ஊடக செயற்பாட்டாளர் தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராக நீதிமன்றத்தினால் தடையுத்தரவு விதிக்கப்பட்டமை.**

"எஸ்பிரெஸ் பேர்ல்" நஷ்டஈடு வழக்கு தொடர்பான தவறான கருத்துக்களையும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவருக்கும் அவதூறான கருத்துக்களை யூடியூப் சேனலில் வெளியிடுவதைத் தடுப்பதற்காகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விகும் டி ஆப்ரூ மற்றும் அரசாங்க சட்டத்தரணி நவோமி கஹவிட்ட ஆகியோர் சமர்ப்பித்த முறைப்பாட்டினை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதுடன் இது மே 10 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

ஆதாரம்: theleader.lk/news

5. **வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டமூலம் தயாரிக்கப்படும் என நாடாளுமன்றத்தில் ஊடகத்துறை அமைச்சர் அறிவித்தமை.**

இலங்கையில் தற்போது 25 உரிமம் பெற்ற தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் 51 வானொலி நிலையங்கள் காணப்படுவதாகவும், உரிமம் வழங்கும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் பாரிய முரண்பாடுகள் காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இது தொடர்பில் முறையான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக இலத்திரனியல் ஒலிபரப்பு அதிகார சபை சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சர் விஜேதாச தலைமையில் பாராளுமன்ற உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஆதாரம்: theleader.lk/news

6. **படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் நினைவேந்தல்.**

18 வருடங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தராகியென அழைக்கப்படும் ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் நினைவாகக் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவில் இரண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஊடகவியலாளர் அமைப்புகளால் இந்தக் நினைவேந்தல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஆதாரம்: twitter.com/JDSLanka, twitter.com

## தொழில்சார் நிபுணத்துவம்

**'தொழில்சார் நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும். சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய–தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தக் குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் ஏப்ரல் மாதத்தில் பதிவாகியுள்ளது.**

**அட்டவணை 04–2023 ஏப்ரல்: தொழில்சார் நிபுணத்துவம்–01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **தற்கொலைபற்றிய செய்தியொன்றை நெறிமுறையற்ற முறையில் அறிக்கையிட்டமை தொடர்பாகச் சுதந்திர ஊடக இயக்கம் முறையீடு ஒன்றை மேற்கொண்டமை.**

இளம் சமூக செயற்பாட்டாளர் புத்தி பிரபோத கருணாரத்னவின் மரணம் தொடர்பில் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி தினமின நாளிதழ் வெளியிட்ட செய்தி தொடர்பிலேயே இந்த முறைப்பாடு இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அறிக்கையில், தற்கொலை தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ள செய்தியின் நெறிமுறைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளதாகவும், அரசியல் காரணங்களுக்காக இறந்த நபர்மீது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் குறித்த முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: si.rata.lk

---

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் நான்கு சம்பவங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைக் கடுமையாகச் சவாலுக்கு உட்படுத்தும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராக பல சக்திவாய்ந்த அமைப்புகளின் செயற்பாடுகளும் இதில் அடங்கும்.**

**அட்டவணை 05–2023 ஏப்ரல் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 04 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 04 |
| **மொத்தம்** | **04** |

1. **அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) அறிவித்துள்ளது.**

இந்தச் சட்டமூலமானது ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அந்த அமைப்பு, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் எனவும், எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது சர்வதேச மனித உரிமைகளின் தரத்திற்கு அமைய வடிவமைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: hrw.org/news

2. **உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமெரிக்க அதிபர் எதிர்க்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின்** (Amnesty International) **அறிவிப்பு.**

ஒவ்வொரு மனித உரிமைக் கோட்பாட்டிலும் தொடர்புடைய வரைவு தெளிவாகத் தவறிழைத்துள்ளதாகவும், இலங்கை மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படும் என்றால், இந்தச் சட்டம் முற்றாகத் திருத்தப்பட வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவான செய்தியை அனுப்ப வேண்டும் என்று அந்த அமைப்பு கூறுகிறது. இந்த உத்தேச சட்டம்,"மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்ட சீர்திருத்தங்களைக் கோரி பல தசாப்தங்களாக முன்னின்ற இலங்கையின் சிவில் சமூகத்தை அவமதிப்பதாகவும்" அது விமர்சகர்களைக் குறிவைத்து மௌனப்படுத்தும் அரசாங்கத்தின் திறனை அதிகரிக்கச் செய்யும் முயற்சி" எனவும் குறித்த அறிவிப்பு மேலும் குறிப்பிடுகின்றது.

ஆதாரம்: www.amnestyusa.org

3. **உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப்பெறுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு (ICJ).**

இந்தச் சட்டமூலத்தினூடாக மரண தண்டனை வழங்கப்படுவதை கடுமையாக எதிர்க்கும் அந்த அமைப்பு, "இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களின் சாதனையை முறியடிக்கும்" எனத் தெரிவித்துள்ளது. உத்தேச சட்டம், அரசியலமைப்பின் 14-வது பிரிவால் பாதுகாக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் சங்கம் அமைத்தல் ஆகிய உரிமைகளை மீறுவதாகவும், சட்டப்பிரிவு 13-ல் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தன்னிச்சையான கைதுகளிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான உரிமையை மீறுவதாகவும் ICJ வலியுறுத்தியுள்ளது.

ஆதாரம்: icj.org

4. **இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்ததுடன் அக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டமை.**

2023 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்கு சிரேஷ்ட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏப்ரல் 5 ஆம் திகதி அறிவித்ததுடன், குழுவின் அறிக்கை ஏப்ரல் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அறிக்கையின்படி, பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் தொடர்புடைய சட்டத்தால் மீறப்படுவதுடன் அதன் 17 ஆம் உறுப்புரையின் கீழ் குற்றவியல் சட்டத்தின் கோட்பாடுகள் மீறப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஆதாரம்: basl.lk, basl.lk/media-statement

**அட்டவணை 6: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| **உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள்** | **2023 மார்ச்** | | **2023 ஏப்ரல்** |
|---|---|---|---|
| | **புதிய சம்பவங்கள்** | **முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு** | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 | - | 04 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 26 | 02 | 06 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 | - | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 07 | - | 04 |
| **மொத்தம்** | **38** | **02** | **15** |

2023 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: Nalinda Seneviratne